### சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில்

# முன்னாள் பிரதமர் வி.பி.சிங் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 28-
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2023), சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 52 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களின் முழுதிருவுருவச் சிலையை சிறப்பு விருந்தினரான உத்தரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் அவர்களின் துணைவியார் திருமதி சீதா குமாரி, மகன் அஜயா சிங் மற்றும் அவரது குடும்பத்தினர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைதேடித் தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ் நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றி பெருமைப் படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத் திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**1989-ல் பிரதமராக பதவியேற்றார்!**

உத்தர பிரதேச மாநிலம், அலகாபாத் மாவட்டத்தில், மிகப்பெரிய ஜமீன்தாரரான ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாகப் பிறந்தவர் விஸ்வநாத் பிரதாப் சிங் என்ற வி.பி. சிங் அவர்கள். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டார்: சர்வோதய சமாஜில் இணைந்தார். பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்தார். தனது நிலங்களையே தானமாக வழங்கினார்.

1969ஆம் ஆண்டு உத்தர பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். பின்னர் உத்தர பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராகவும், ஒன்றிய வர்த்தக அமைச்சராகவும், வெளியுறவுத் துறை அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும், பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் பதவி வகித்தார். தேசிய முன்னணியை உருவாக்கி 1989ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராக பதவி வகித்தார்.

**27 சதவிகித இடஒதுக்கீட்டை அமல்படுத்தியவர்!**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது பட்டியலின, பழங்குடியினருக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் தனி இடஒதுக்கீடு தரப்பட்டது. ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு. அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீடு தரப்பட வில்லை. இதனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் B.P. மண்டல் தலைமை யிலான ஆணையம். சமூகரீதியாகவும், கல்வியிலும் பின்தங் கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்துக்கு, B.P. மண்டல் பரிந்துரையின் ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற உத்தரவை அமல்படுத்தியவர் வி.பி. சிங் அவர்கள்.

வி.பி.சிங் அவர்கள் பதவியிலிருந்த 11 மாத காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான தொடக்கப் புள்ளி, வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை ஆக்கியது, தேர்தல் சீர்திருத்தங்கள், மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில், தேசியப் பாதுகாப்புக் குழு, உழவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூன்று குழுக்கள், டெல்லி குடிசைப் பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை (MRP) அச்சிடுதல் போன்றவற்றை செயல்படுத்திய மாபெரும் சாதனையாளர் ஆவார்.

**காவிரி நடுவர் மன்றம் அமைத்தவர்!**

தமிழ்நாட்டு மக்களின் உயிர்ப் பிரச்சினையான காவிரி நீருக்காக நடுவர் மன்ற ஆணையத்தை அமைத்துத் தந்ததோடு, சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராசர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத் திற்கு பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டிய பெருமைக்குரியவர் வி.பி.சிங் அவர்கள். உயர்வர்க்கத்தில் பிறந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகச் சிந்தித்தவர், எத்தனை உயர் பதவி வகித்தாலும் கொள்கையை விட்டுத் தராதவர் வி.பி. சிங் அவர்கள்.

**சட்டப் பேரவையில் முதல்வர் அறிவிப்பு!**

இத்தகைய ஒப்பற்ற தலைவரான வி.பி.சிங் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவருக்குத் தமிழ்ச் சமுதாயத்தின் நன்றியைத் தெரிவிக்கும் வகையிலும் முதலமைச்சர் அவர்கள் 20.4.2023 அன்று சட்டப்பேரவை விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், சமூகநீதிக் காவலர், மேனாள் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், சென்னையில் அவரது முழு உருவ கம்பீரச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 52 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் முழு திருவுருவச் சிலையை சிறப்பு விருந்தினரான உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் அவர்களின் துணைவியார் திருமதி சீதா குமாரி, மகன் அஜயா சிங் மற்றும் அவரது குடும்பத்தினர் முன்னிலையில் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ரிப்பன் கட்டடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்படுவதை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுத் தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையிலான குழுவினர் நேற்று (27.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், குழுவின் உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஈ.ஆர்.ஈஸ்வரன், க.கார்த்திகேயன், ஆ.கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகரன், டாக்டர் சி. சரஸ்வதி, எஸ். சேகர், எஸ்.எஸ். பாலாஜி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்

# திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் எழுச்சி மிகு கொண்டாட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாடு!

திருவொற்றியூர், நவ.28-
தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் அனைத்து வட்டங்களிலும் இருவண்ணக்கொடியேற்றி இனிப்பு வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி பகுதி கழக செயலாளர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் 3 வது வட்டம் நேதாஜி நகர் பகுதியில் ஆர். நவக்குமார் அவர்கள் வரவேற்பில்.. 3 (அ ) வட்டக் கழக செயலாளர் பி. தமிழரசன் எம்.சி. முன்னிலையில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து காசிக்கோயில் குப்பம் ஆரம்ப பள்ளி மாணவ மாணவிகள் 200 பேருக்கு புத்தாடைகள் வழங்கினார். பின்னர் மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன் பகுதி கழகத் துணைச் செயலாளர் யூ. எஸ். குறளரசன் 4 வது வட்ட செயலாளர் கே. பவுல் மாவட்ட பிரதிநிதிகள் ந. ராம்குமார், ஜி. தினேஷ், பொன். கோ. விஜயன், வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் அரிமா வி.தியாகராஜன் லயன் எஸ்.இளங்கோ வி. கே. ஏழுமலை, விளையாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன் மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர் லிவிங்ஸ்டன் ராஜ்குமார் பகுதி பிரதிநிதிகள் வை . சின்னையன், கோபால், தழுவை.எஸ். ரஞ்சித் துரைராஜ், டி.சக்கரவர்த்தி 2 வது வட்ட அவைத் தலைவர் கே.பாலு 2வது வட்ட துணைச் செயலாளராக ஆர்.மதன்குமார், 4 வது வட்ட பொருளாளர் பி.எம்.ஹரி கோ. பூங்கொடி கோகுல்,வேலாயுதம், எஸ். ராஜேஷ் பகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி, டி. ஞானசேகர்முகுணசீலன்,ஜெ. விக்னேஷ், எஸ். ஜோயல், கோகுல் இ.பூங்கொடி, ராம்,அஜித், விஷால், எம். ராமு, சரவணன் ஜே. சி. கோபிகுமார், எஸ்.சேது மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னாடிகள், கழக உடன் பிறப்புகள் உள்ளிட்டோர் பங்கு கொண்டனர். வட்ட பிரதிநிதி எம்.கார்த்திக் மற்றும் ஆர்.நரேன்குமார் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., ஆலோசனைப்படி, பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி வழிகாட்டுதல்படி, மேப்பூர் ஊராட்சியில் தாங்கல் பகுதியில் உள்ள ஊராட்சி நடுநிலைப்பள்ளிக்கு ஸ்மார்ட் தொலைக்காட்சி, பீரோ மற்றும் அகரமேல் ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் 250 மாணவர்களுக்கு அறுவை உணவுகளை பூவிருந்தவல்லி ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் பூவை எம்.ஜெயக்குமார் வழங்கினார். பின்னர் பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டுப் புத்தகம், எழுதுப் பொருட்கள் மற்றும் இனிப்பு வழங்கினார். உடன் எம்.வெங்கடேசன், வி. கண்ணியப்பன், டி.தருமன், ஜி.ஞானம், டி.வேலு, பி.சி.உதயன், டி.அஜித், கமல், ராஜ்குமார், தணிகாசலம், கருணா, மதிவாணன், விஜி, கழக உடன்பிறப்புகள், பள்ளி ஆசிரியர் உள்ளனர்.

### கிருஷ்ணகிரியில் - நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப் - நகர்மன்றத் தலைவர் பரிதா நவாப்பால் நிறுவப்பட்ட

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார் !

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் தலைமையில் விழா!

கிருஷ்ணகிரி, நவ. 28 -
கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருஉருவ வெண்கல சிலையினை கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் கிருஷ்ணகிரி நகர கழகச் செயலாளர் எஸ்.கே.நவாப்.கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.பரிதா நவாப் ஆகியோரால் நிறுவப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலை திறப்பு விழா கிருஷ்ணகிரி கலைஞர் மேம்பாலம் அருகே நடைபெற்றது. விழாவிற்கு கழக பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமை தாங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருட்கள் வழங்கல் துறை அமைச்சருமான அர. சக்கரபாணி வரவேற்புரை ஆற்றினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லம்ரஹ்மான் ஷெரீப் , பாலன் நாகராசன், கே.ஆர்.கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி மற்றும் நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை கே.ஆர்.பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்துப் பாதுகாப்பு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் எம்.வி. வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.கோவிந்தசாமி, கிருஷ்ண மூர்த்தி, நரசிம்மன், மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, பி.டி. அன்பரசன், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், மகேந்திரன் தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், குண.வசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம் குமரேசன், பேரூர் கழகச் செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன் பாபு சிவகுமார், அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயேந்திரன், லட்சுமி பிரியா, புஷ்பா விஜய் ராஜசேகர், காந்தி, பாலாஜி, சுரேஷ்குமார், ஜெயக்குமார், சாஜித், இளைய ராஜா, மோகன், வேல்மணி அம்மன் ராஜா, சங்கர், தமிழ்ச்செல்வன், ஜீவானந்தம், வெங்கடேஷ் ராஜா, மாணிக்கம், சத்தி நாராயண மூர்த்தி,நேதாஜி, கிருஷ்ணன் மற்றும் அணிகளின் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டப் பிரதிநிதிகள், ஊராட்சி செய லாளர்கள், வார்டு செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முன்னதாக குத்தூஸ் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

முடிவில் கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ். கே.நவாப் நன்றி உரையாற்றினார்.

### சேலம் - பொட்டனேரி - முன்னாள் இராணுவ வீரர்

# மு.செந்தில்குமார் 30ஆம் ஆண்டு நினைவு நாள்!

## திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் அஞ்சலி!

சேலம், நவ. 28-
சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம், பொட்டனேரி கிராமம் குள்ளமுடையனூரைச் சேர்ந்த - முன்னாள் இராணுவ வீரர் மு.செந்தில் குமார் அவர்களின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (28.11.2023)கடைப் பிடிக்கப்படுகிறது.

முத்துசாமி - பார்வதி அம்மாள் ஆகியோரின் மூத்த மகனாய் 28.5.1972ல் பிறந்து இராணுவ போர் வீரனாய் பணியில் சேர்ந்து, பணியின் போது 28.11.1993-ல் வீர மரணம் அடைந்த மு.செந்தில் குமார் அவர்களின் பெயர்



சேலம் கலெக்டர் அலுவலகத்தில் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த முன்னாள் இராணுவ வீரர் மு.செந்தில்குமாரின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (28.11.2023) அன்னாரது இல்லத்தில் கடைப் பிடிக்கப்படுகிறது.

கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவரான - அவருக்கு காவல்துறை உதவி ஆய்வாளர் மு.சிவராசு என்ற தம்பியும், மு. மலர்க்கொடி, மு.பாக்கிய லட்சுமி என்ற இரு தங்கைகளும் உள்ளனர். தங்கை மு.மலர்க்கொடி மேச்சேரி ஒன்றிய தி.மு.க. முன்னாள் துணைச் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது நினைவு நாளில் பொட்டனேரி கிராமத்தினர், கழகத்தினர் கலந்துகொண்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.எஸ். கே. சத்தியா ஏற்பாட்டில் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பிரம்மாண்டமான கேக் வெட்டி ஆயிரம் நபருக்குபிரியாணி மாவட்ட கழக செயலாளர்.க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் பி. சேகர். ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர் கே தேவேந்திரன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. சஞ்சய் காந்தி ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி மீனா துரை, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி.குமரன், எல்.ரமேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே வினோபாஜி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# எண்ணூர் கத்திவாக்கம் 2வது வார்டில் அறுசுவை உணவு!

## கோமதி சந்தோஷ்குமார் எம்.சி. வழங்கினார்!

சென்னை, நவ. 28-
இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் 2வது வட்டத்தில் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆலோசனைப்படி 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதிசந்தோஷ் குமார் பங்கேற்று தூய்மை பணியாளர்கள் பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் அறுசுவை உணவு பிரியாணி வழங்கினார்.

இந்நிகழ்வில் திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணை செயலாளர் இ.ரமேஷ், முன்னாள் நகர செயலாளர் அ.பாண்டியன், மாவட்ட வர்த்தகர் அணி துணை தலைவர் பிரட் சுரேஷ், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.தேசப்பன், 2வது வட்ட பகுதி பிரதநிதி பி.ரமேஷ், முன்னாள் நகர துணை செயலாளர், எம்.மகேந்திரன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் பி.பட்டறையன், கழக செயல் வீரர்கள் ஆர்.எஸ்.ரோடு முருகன், ஆர்.சுரேஷ், ராஜேஷ், மாரியப்பன், விக்கி, சுரேஷ், கார்த்திக்,தயாளன், பங்கேற்றனர்.

இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சியை இளைஞர் அணி கே.முனுசாமி ஏற்பாடு செய்திருந்தார்.



சைதை மேற்கு பகுதி 139வது (அ) வட்டத்தில் இளைஞர் அணி சார்பில் கழக மாநில இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சைதாப்பேட்டை மேற்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள ஜெயராஜ் திரையரங்கம் அருகில் ஜிம் க. பிரபு தலைமையிலும் பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், சைதை மா.அன்பரசன் முன்னிலையில் கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவினை பத்தாவது மண்டல குழு தலைவரும் சைதை மேற்கு பகுதி கழக செயலாளருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வழங்கினார். களக்காடிஎல்லப்பன், ஆர். ரமேஷ், சை.மு.சேகர், நா.தமிழரசு, எம்.நாகா, டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், பால்கார் ரவி, மா.ஏழுமலை, பூபதி வெங்கடேசன், பரத்குமார், கொடிபாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.